திருவண்ணாமலை மாவட்ட நலப்பணிகள் இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர்:- மரு. எம்.கே.விஜயகுமார், எம்டி.,

ந.க.எண்.5549 / நி 2 / 2014

நாள்.05.11.2015.

பொருள்:- பணியாளர் குழு – திரு.E.வெங்கடேசன், தட்டச்சர், நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகம், திருவண்ணாமலை தற்காலிக பணிகள் 08.10.2014 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

பார்வை:-
1) செயலாளர், தமிழ்நாடு அரசு பொது தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதம் 5904/PSD-F/2014, நாள்.03.09.2014.
2) இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், சென்னை-6 அவர்களின் கடித எண்.56491/நி 2/2/14, நாள்.10.09.2014.
3) இவ்வலுவலக பணி நியமன ஆணை எண்.5549/நி2/2014- 2 நாள்.01.10.2014.

<><><><><>

பார்வை 1-ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடிதத்தின்படி 2013-2014-ம் ஆண்டு வகை IV பணியிடங்களில் தட்டச்சர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்டு பார்வை 2-ல் காணும் இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், சென்னை-6 அவர்களின் கடிதம் மூலம் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு மறு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 3-ல் காணும் இவ்வலுவலக பணி நியமன ஆணையின்படி திருவண்ணாமலை நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகத்தில் பணியமர்த்தம் செய்யப்பட்ட தட்டச்சர் திரு.E.வெங்கடேசன், என்பவரின் தற்காலிக பணிகள் கீழ்குறித்தவாறு வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | பணி நியமனம் செய்யப்பட்ட ஆணை எண் மற்றும் நாள் | தற்காலிக பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| 1. | திரு.E.வெங்கடேசன், தட்டச்சர், நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகம், திருவண்ணாமலை. | இவ்வலுவலக பணிநியமன ஆணை ந.க.எண். எண்.5549/நி 2 / 2014-2, நாள்.01.10.2014 | 08.10.2014 முற்பகல் | 08.10.2014 முற்பகல் |

இவரது தற்காலிகப்பணிகள் வரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து (அதாவது 08.10.2014 முற்பகல் முதல்) இரண்டாண்டு காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். இப்பருவத்தை இவர் தனது மூன்றாண்டு தொடர் பணி காலத்திற்குள் நிறைவு செய்திட வேண்டும் என ஆணை வழங்கப்படுகிறது.

மேலும் இவர் பணியில் சேர்ந்த இரண்டாண்டுக்குள் தமிழ்நாடு மருத்துவ விதி தொகுப்பு மற்றும் Certificate Course in Computer on Office Automation தேர்வினிலும் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

இந்த பணி வரன்முறை ஆணையானது 2013-14 ம் ஆண்டில் வகை IV பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் / மதுரை கிளையில் நிலுவையிலுள்ள வழக்குகளின் தீர்ப்புக்கு உட்பட்டது.

நலப்பணிகள் இணை இயக்குநர்,
திருவண்ணாமலை.

பெறுநர்

திரு.E.வெங்கடேசன், தட்டச்சர்,
நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகம், திருவண்ணாமலை (உரிய வழியாக).

நகல்:- இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், சென்னை-6 அவர்கட்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்:- பணிப்பதிவேடு / அலுவலக ஆணைப்புத்தகம் / தனி-1.

இணை இயக்குநர்
மருத்துவம் மற்றும் ஊரக
நலப்பணிகள் (பொ)
வேலூர், வேலூர் மாவட்டம்